அ.வ.எண். 08/2015 நாள்:03.12.2021

**வா.சா.1. வனரோஜா**

**6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என்னுடைய அம்மா பெயரில் வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் இருந்தது என்றால் சரிதான். என்னுடைய அம்மா பெயரில் உள்ள சொத்துக்களை என்னுடைய அம்மா கிரையம் வாங்கினாரா என்றால் இல்லை. என்னுடைய அம்மா ஒரு சொத்தை எனக்கு செட்டில்மென்ட் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய அம்மா 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு வெவ்வேறு சொத்துக்களை செட்டில்மென்ட் ஆவங்கள் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா 3 வது அயிட்ட சொத்தை என்னுடைய அம்மா செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் 1 வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மென்ட் பத்திரம் எழுதப்பட்ட பிறகு 3 வது அயிட்ட சொத்தை 1 வது பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் என்னுடைய அம்மா 1 வது பிரதிவாதிக்கு வயலை எழுதி வைத்தார். தாவா 3 வது அயிட்ட சொத்துக்குரிய பட்டா மற்றும் வரி யார் பெயரில் உள்ளது என்றால் யார் பெயரில் உள்ளது என்று தெரியாது என்னுடைய அம்மா 1 வது பிரதிவாதி என்னை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார் என்று கூறி பத்திரத்தையும் பட்டாவையும் என்னிடம் கொடுத்தார். இந்த விவரத்தை நான் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. இந்த விவரத்தை வழக்குரையில் கூறவில்லை எனவும் தற்போது தான் முதன்முறையாக இங்கு கூறுகிறேன் என்றும் சொன்னால் சரிதான். என்னுடைய அம்மா எனக்கு, 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மென்ட் மூலம் எழுதி கொடுத்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான் ஏனென்றால் அந்த சொத்துக்கள் சம்பந்தமாக பிரச்சனை எதுவும் இல்லை. 2 வது அயிட்ட சொத்தில் சில சொத்துக்கள் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் 1 வது பிரதிவாதி உயிலை தயார் செய்து அவரே கிரையம் செய்து கொடுத்துவிட்டார். 1 வது பிரதிவாதி தான் 2 அயிட்ட சொத்தில் சில சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தார் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். என் தந்தை

உயிருடன் இருந்த போதே 2 வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும் 1 வது பிரதிவாதி உயிலை தயாரித்து கிரையம் செய்து கொடுத்துவிட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 வது பிரதிவாதி உயிலை தயார் செய்து கிரையம் செய்து கொடுத்துவிட்டதாக வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 1 வது பிரதிவாதி தாவா 2 வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்தாக கூறும் பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை அந்த நிலத்தை வாங்கியவர் என்னிடம் சொன்னார். என்னுடைய அம்மா அவருடைய சுய சம்பாத்தியம் மூலம் சொத்துக்களை வாங்கி வைத்திருந்தார் என்றால் இல்லை. என்னுடைய அம்மா அவருடைய சுய சம்பாத்திய சொத்தை தான் எனக்கும் 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கும் வேறு சொத்துக்களையும் 1 வது பிரதிவாதிக்கு தாவா 3 வது அயிட்ட சொத்தையும் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி கொடுத்தார் என்றும் நான் மற்ற சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காமல் 3 வது அயிட்ட சொத்தை மட்டும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய தந்தை 2 வது அயிட்ட சொத்தில் கிரையம் செய்து கொடுத்த சொத்தையும் சேர்த்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு எங்கள் ஊரில் வசிக்கும் ராதாகிருஷ்ணன், ராஜேந்திரன், பிச்சையன், பிரகாஷ் மற்றும் கேசவன் ஆகியோரை தெரியும். இவர்கள் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் எனக்கு 701 சதுரடி நிலம் மட்டும் போதும் என்று பேசினார்களா என்றால் என்னை வைத்து பேசவில்லை என் மகனை வைத்து பேசினார்கள். பி.சா.ஆ.1 ல் கையெழுத்துப் போடும் போது நான் வீட்டில் இருந்தேன். என்னுடைய மகன் கையெழுத்து கேட்டபோது நான் மறுத்தேனா என்றால் மறுத்தேன் என்னுடைய மகன் கையெழுத்து போடுங்கள் அவர்கள் செய்யவேண்டியதை செய்வார்கள் என்று சொன்னார். நானும் என்னுடைய மகனும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய தந்தை உயிருடன் இருந்த போது என் பெயரிலும் நிலங்கள் வாங்கியுள்ளார் என்றும் அந்த நிலங்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றும் சொன்னால் நான் பணம் கொடுத்தேன் என்னுடைய அப்பா நிலம் வாங்கி கொடுத்தார். நான் பணம் கொடுத்ததாக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்தை என்னுடைய அம்மா செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் 1 வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றும் அதனை 1 வது பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும் அந்த சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல அது என்னுடைய நிலம்.

**மறுவிசாரணை:**

இல்லை. /ஒ.ம்/

திரு. A. தனசேகரன், BSc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.